[1969 செப்டம்பர் 12

புயல் நிவாரணம்

*258 வினா.—திரு. சா. மெய்யப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லல் பஞ்சாயத்து யூனியனிலிருந்தும், சாக்கோட்டை பஞ்சாயத்து யூனியனிலிருந்தும், 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் புயலால் பாதிக்கப்பட்ட கண்மாய்கள், ரோடுகள் முதலியவைகளின் மராமத்துக்கு விவரங்கள் அனுப்பி மராமத்து மானியம் கோரப் பட்டதா ?

(இ) ஆம் எனில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் எவ்வளவு கோரியது ?

(உ) எவ்வளவு பணம் சாங்ஷன் செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) கல்லல் பஞ்சாயத்து யூனியனிடமிருந்து மானியம் கோரி வந்துள்ளது. சாக்கோட்டை பஞ்சாயத்து யூனியனிடமிருந்து வரவில்லை.

(இ) ரூ. 88,000 கோரப்பட்டது.

(உ) தலைமைப் பொறியாளரிடமிருந்து (நெடுஞ்சாலை கிராமப் பணி) வரப்பெற்ற திட்ட மதிப்பீடுகளில், வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பாதை வேலைகளுக்கென்று ரூ. 39,450 கல்லல் ஊராட்சி ஒன்றியத்துக்கு வழங்கப்பட்டது. (சாக்கோட்டைக்கு தொகை ஒன்றும் வழங்கவில்லை.)

தலைமைப் பொறியாளரிடமிருந்து (நீர்ப் பாசனம்) வந்த திட்ட மதிப்பீட்டில் வெள்ளத்தடுப்புகளுக்கான வேலைக்காகவும், கரை வழிந்தோடும் குளங்களின் கரைகளைத் திடப்படுத்துவதற்கும் ரூ. 2,54,390-ம் ரூ. 2,63,070-ம் முறையே சாக்கோட்டை, கல்லல் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்கப்பட்டன.

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே, கண்மாயில் கட்டிய கலுங்குகள் மட்டம் சரியில்லாததாலும், நீர்ப்பிடி நிலங்களில் ஆக்கிரமிப்பு காரணமாய் கண்மாய் சுருங்கு கரைகள் பலவீனமாகி விட்டதாலும், கண்மாயில் உடைப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்க கலுங்குகளையும் கண்மாய் நீர் மட்டங்களையும் புனராலோசனை செய்து பாதிப்புகளைத் தடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைமைப் பொறியாளர் சீர்படுத்துவதற்காகத்தான் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக் கிறது என்று கருதுகிறேன்.